# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2017 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

*(2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2017, நவெம்பர் மாதம் 17 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 5.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2017 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

[*2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.- ஓ. 1/2017*

**எதிர்பாராத மற்றும் அவசர சூழ்நிலைகள் காரணமாக வடமாகாணத்திலுள்ள இரு பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் பின்போடப்பட்டுள்ள அத்தகைய சபைகள் தொடர்பில் புதிய பெயர் நியமனங்களைக் கோருவதற் காகவும் தேர்தல்களை நடாத்துவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக் காகவும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*வடமாகாணத்திலுள்ள புதுக்குடியிருப்பு மற்றும் கடற்கரைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பிலான பெயர்நிய மனங்கள் பெற்றுக்கொள்ளப்படுமென, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழான அறிவித் தல்கள் வெளியிடப்பட்டனவாதலாலும்:* *முன்னுரை.*

*அத்துடன் மேற்கூறப்பட்ட பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை நடாத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட வாக்கெடுப்புக்களின் தேதிகள், எதிர்பாராத மற்றும் அவசர சூழ்நிலைகள் காரணமாக உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளின் மூலம் எதிர் பாராத மற்றும் அவசர சூழ்நிலைகள் காரணமாக காலத்துக்குக் காலம் பிற்போடப்பட்டனவாதலாலும்:*

*அத்துடன் தமது பெயர் நியமனங்களை அளித்துள்ள ஆட்கள் ஒன்றில் இறந்துள்ளனர் அல்லது புலம்பெயர்ந்துள்ளனர் அல்லது கட்சி மாறியுள்ளனர் ஆதலாலும் அல்லது தமது பெயர்நியமனங் களை அளித்துள்ள கணிசமான எண்ணிக்கையினரான ஆட்கள் வெளிநாடு சென்றுள்ளனர் என்ற நிகழ்வுகாரணமாக அல்லது பெயர்நியமனங்களை அளித்த நேரத்தில் முப்பத்தைந்து வயதுக் குக் குறைவாகவிருந்த ஆட்கள் இப்போது முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களாகவுள்ளவிடத்து, மேற்கூறப்பட்ட பிரதேச சபைகள் தொடர்பில் புதிய பெயர்நியமனங்களைக் கோருவதற்காக ஏற்பாடு செய்தல் அவசியமாக வந்துள்ளதாதலாலும்:*

2-PL 010387-962 (2017/10)

அத்துடன் மேற்கூறப்பட்ட பிரதேச சபைகள் தொடர்பில் பெயர் நியமனங்களைச் சமர்ப்பித்ததிலிருந்து கழித்துள்ள காலப்பகுதி காரணமாக அத்தகைய பிரதேச சபைகள் தொடர்பில் புதிய பெயர் நியமனங்களைக் கோருவதற்காக ஏற்பாடு செய்தலும் மேற்கூறப்பட்ட சபைகள் தொடர்பில் புதிய தேர்தல்களை நடாத்துவதற்காக ஏற்பாடு செய்தலும் அவசியமாக வந்துள்ளதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

குறித்த சில சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பில் பெயர் நியமனங்களும் வைப்புகளும் தொடர்பான ஏற்பாடுகள்.

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "கட்டளைச்சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கான பதிலாக, கட்டளைச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின்கீழ் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள பிரதேச சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட பெயர்நியமனப்பத்திரங்கள் எவ்வலுவோ பயனோ அற்றனவாகவும் அத்தகைய பெயர்நியமனப்பத்திரங்கள் எப்போதேனும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றாற்போன்றும் இத்தால் கருதப்படுகின்றன.

(2) அட்டவணையில் தரப்பட்டுள்ள பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பில் கட்டளைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

(3) அட்டவணையில் தரப்பட்டுள்ள பிரதேச சபைகளுக்கான தேர்தலுக்காகச் சுயேச்சைக் குழுவொன்றினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் தொடர்பில் கட்டளைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின்கீழ் இடப்பட்ட வைப்புக்கள், கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவில் முரணாக எது எவ்வாறிருப்பினும், கட்டளைச்

சட்டத்தின் 29 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வைப்பிலிட்ட ஆளுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு அத்தகைய ஆளினால் காண்பிக்கப்படுவதன்மேல், வைப்பிலிட்ட தேதியிலிருந்து மீளளிப்புத் தேதிவரை ஆண்டொன்றுக்குப் பன்னிரண்டு சதவீதத்தில் அத்தகைய வைப்பின்மீதான வட்டியுடன் சேர்த்து மீளளிக்கப்படுதல் வேண்டும்.

**3.** இரண்டாயிரத்துப் பன்னிரண்டாம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 82 ஆம் பிரிவில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை நடாத்துவதற்காகக் கட்டளைச் சட்டத்தின்கீழான நடபடிகள் தொடங்கப்படுதல் வேண்டும்:

தேர்தல்கள் நடாத்துவதற்காகத் தொடங்கப்பட வேண்டிய நடபடிகள்.

ஆயின், கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பெயர் நியமனத்தின் அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தேதி எவ்வாறாயினும் இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு பிந்தாத தேதியொன்றாக இருத்தல் வேண்டும்.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**அட்டவணை**

(பிரிவுகள் 2 மற்றும் 3)

1. புதுக்குடியிருப்பு பிரதேச சபை ; அத்துடன்
2. கடற்கரைப்பற்று பிரதேச சபை.